# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



| | | |
|---|---|---|
| மலர்: 21 | ரௌத்ர வருஷம் - சித்திரை, வைகாசி<br>ஏப்ரல், மே - 1980 | இதழ் : 3, 4 |



## வியாஸ பூஜையும்- சாதுர் மாஸ்யமும்

ஸந்நியாஸிகள் யாவரும் அனுஷ்டிக்கும் பூஜை வியாஸ பூஜை: விரதம் சாதுர் மாஸ்யம். இதில் எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் த்வைத அத்வைத விசிஷ்டாத்வைத ஆசார்யர்கள் யாவரும் இந்த இரண்டையும் அனுஷ்டிக்கின்றனர்.

வியாஸ பகவான் போல லோகோபகாரம் செய்தவர் யாரும் இல்லை. வேதத்தை நான்காக பிரித்ததாலே இப்பெயர் பெற்றார். வேதக் கருத்துக்களை தெளிவாக, சுலபமாக, விரிவாக விளக்குவதற்காக 18 புராணங்களைப் படைத்தார். மகாபாரதம் என்ற அரிய பெரிய இதிஹாஸம் செய்தது ஒன்றே ஈடு இணையற்றது. இவர் ஆத்ம தத்துவத்தை போதிக்கும் உபநிஷத்பாகங்களின் தாத்பர்யத்தை யுக்திகளால் விளக்கி ஸ்தாபிக்கச் செய்த கிரந்தம்தான் " ப்ரம்ஹஸூத்ரம் ". இந்த ஸூத்ரங்கள்தான் வேதாந்தஸித்தாந்தத்தின் கண்ணாடியாகும். இந்த ப்ரம்ஹஸூத்ரங்கள் " உத்திர மீமாம்ஸா சாஸ்திரம் " எனவும் பெயர் பெறுகின்றன. இதற்கு மூன்று மதஸ்தர்களும் வியாக்கியானம் செய்துள்ளார்கள். எனவே மூம்மதஸ்தர்களும் வியாஸபகவானை பூஜிக்கின்றனர்.

ஆத்மதத்துவத்தை ஸூத்ரங்கள் வாயிலாக நன்றாக விளக்கி அருளிய வியாஸரை ஆத்ம ஞானத்தில் ஈடுபட்ட ஸந்நியாஸிகள் வியாஸ பௌர்ணமி அன்று ஸ்ரீவியாஸ பகவானை பூஜித்து வருகிறார்கள். அன்று தங்களது மதகுருபரம்பரையில் தோன்றிய ரிஷிகளை பூஜிக்கிறார்கள்.

மழைக்காலங்களில் பாதயாத்திரை செய்யுங்கால் தெருக்களில் நடமாடும் பல கிருமிகளும் காலால் மிதிபட்டு மரிக்குமாதலால் அஹிம்ஸையை சிரமேற்கொண்ட யதிகள் இந்த காலத்தில் பாதயாத்திரை செய்யாமல் ஓரிடத்திலேயே தங்குகிறார்கள். பக்தர்களும், சிஷ்யர்களும், இந்த விஷயத்தை உணர்ந்து யதிகளை, " தாங்கள் மழைக்காலத்தில் இங்கேயே தங்கவேண்டும். தங்களுக்கு வேண்டிய சுச்ருஷைகளைச் செய்கிறோம் " என்று பிரார்த்தித்துக் கொள்வார்கள். யதிகளும் அவர்கள் பிரார்த்தனையை அங்கீகரித்து தங்குவார்கள். இந்த சமயத்தில், விசேஷமான ஆகாராதி வ்ரதங்களுடன் 2 மாதகாலம் தங்குவார்கள். இந்த வ்ரதம் 4 மாதங்கள் செய்ய வேண்டியது. ஆனால் ஒரு மாதத்தை ஒரு பக்ஷமாக வைத்துக் கணக்கிட்டு நான்கு பக்ஷங்கள் அல்லது இரண்டு மாதங்கள் அனுஷ்டிப்பது பழக்கத்தில் வந்துள்ளது. இந்த காலங்களில் வேதாந்த கிரந்தங்களை யதிகள் விசேஷமாக அத்யாபனம் செய்விப்பார்கள். நம் பரமாசார்யர்கள் பல சாஸ்திர பண்டிதர்களை வரவழைத்து சாஸ்திர வாக்கியார்த்தங்கள் நடத்தி வருகிறார்கள். ஸகல சாஸ்திரங்களையும் விரிவாக்கிய ஸ்ரீ வேதவியாஸரின் பூஜைக்கு இது மிகவும் பொருத்தமானதும் நிகரற்றதும் ஆகும்.

இவ்வருஷம் ஸ்ரீ வியாஸ பூஜை 27-7-'80 அன்று வருகிறது. காஞ்சி ஜகத்குரு ஸ்ரீபரமாசார்யர்கள் வியாஸ பூஜையை மஹாராஷ்டிர ராஜ்யம் சதாராவிலும் ஸ்ரீ ஆசார்யர்கள் ( ஸ்ரீ ஜகத்குரு ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ) குஜராத் பிரதேசம் அகமதாபாத்திலும் நடத்துகிறார்கள்.


எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி, எம். ஏ.
மயிலாப்பூர் சமஸ்கிருதகல்லூரி